# பொதுக்காலம் 33ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

அன்பு சகோதரமே! இயேசுவின் இனிய நாமத்தில் பொதுக்காலம் 33ஆம் ஞாயிறு திருப்பலி விருந்தில் பங்கேற்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களும், செபங்களும்!

கிறிஸ்து அரசர் பெருவிழாவிற்கு முந்தைய ஞாயிறான இன்று இயேசு கிறிஸ்து மாட்சியோடு வருவதை எதிர்கொள்ள தயாராக இருக்க நம் அனைவரையும் அழைக்கிறது.

அரசராக இருந்தாலும், ஆண்டியாக இருந்தாலும் பணிவுடனும், துணிவுடனும் நேர்மையோடு வாழ்வர் மீட்படைவர் என்று இன்றைய இறைவார்த்தை நமக்கு அறைகூவல் விடுக்கிறது.

“இதோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வர இருக்கிறார்”, அவரை எதிர்கொள்ள சாட்சிய வாழ்வு மூலம் நம்மையே தயாராக வைத்திருக்க வேண்டும். உலகம் முடிவுக்கு வரும். இயேசுவின் இரண்டாம் வருகை இருக்கும். அது எப்போது? என்ற கேள்வியை விட்டுவிட்டு, உலக முடிவை எதிர்கொள்ள, தீமை செய்வதை விட்டொழிந்து, நன்மை செய்து, நீதியை நாடித் தேடி, ஒடுக்கப்பட்டோருக்கு உதவிசெய்து வாழும் போது நாம் சாவைப் பற்றியோ, தீர்ப்பைப் பற்றியோ கவலைப்படத் தேவையில்லை.

முடிவில்லா வாழ்வைப் பெற தயார் நிலையில் என்றும் இருந்து இயேசுவை எதிர்கொள்ள அருள் வேண்டி இத்திருப்பலியில் இணைவோம்.

## முதல் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! யூத மக்கள் மிகுந்த நம்பிக்கையோடு இறைவனின் வருகைக்காக காத்திருக்கின்றனர். இறைவன் வரும்போது இறந்தோர் உயிர்த்தெழுவர், இறுதித் தீர்ப்பு நடைபெறும் என்று காத்திருந்தனர். நிம்மதியற்ற வாழ்வு முடிந்து, நல்லவர்கள் ஒன்று சேர்க்கப்பட்டு அனைவரும் மகிழ்வோடு வாழ்வோம் என்ற நம்பிக்கையைத் தரும் இறைவாக்கினர் தானியேலின் வார்த்தைகளுக்குச் செவிசாய்ப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

அன்பார்ந்தவர்களே! நம்முடைய பாவங்களுக்காக மரித்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்த இயேசுவின் பலியைவிட சிறந்த பலி இல்லை என்று எடுத்துக் கூறுகின்றது. இயேசுவின் இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றம் என மூன்றையும் உள்ளடக்கியதுதான் இறைவனின் பலி எனக் கூறும் எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தின் வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், திருத்தொண்டர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் வார்த்தையை வாழ்வாக்கி,

மற்றவர்களை ஆன்மீகப் பயணத்தில் நம்பிக்கையோடு வழிநடத்த தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நீதியின் அரசரே எம் இறைவா! எம் நாட்டுத் தலைவர்கள் அனைவரும் உழைப்பே உயர்வு என்பதனை உணர்ந்து, நீதி நேர்மையோடு பணிபுரிய தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் இறைவா! எம் பங்கிலுள்ள பெரியோர்கள், இளைஞர்கள், சிறுவர்கள் அனைவரையும் ஆசீர்வதியும். மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு கொண்டு வாழத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. உறவின் ஊற்றே எம் இறைவா! எம் பங்கில் உள்ள அனைத்து மக்களையும் ஆசீர்வதியும். இறை நம்பிக்கையில் தளர்ச்சி காணாமல், ஒளியின் மக்களாய் வாழத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com